ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

का विद्या कवितां विनाऽर्थिनिजने त्यागं विना श्रीश्च का
को धर्मः कृपया विना क्षितिपतिः को नाम नीतिं विना ।
कस्सूनुर्विनयं विना कुलवधूः का स्वामिभक्तिं विना
भोग्यं किं रमणीं विना क्षितितले किं जन्म कीर्तिं विना ॥

கவிதையில்லாமல் வித்தை மாத்திரமிருப்பின் அது சிரேஷ்டமல்ல. யாசகர்களுக்குக்கொடுக்கப் படாமலிருக்கும் ஐசுவரியமும் உபயோகமில்லை. தயையன்றியில் நடத்தும்தர்மமும் பயனற்றதாகும். நியாயமார்க்கத்தினின்றும் மாறிநடக்கும் அரசனுக்கு அரசனென்ற பெருமை ஏற்படாது. வணக்கமும் மரியாதையு மில்லாமலிருக்கும் புத்திரன் பயனற்றவனுவான். பர்த்தாக்களிடம் பக்தியிழந்த மங்கையர் குடும்பத்திற்கு அருகளாகார்கள். உத்தம குணமுடைய ஸ்திரீயைக்காட்டிலும் சிறந்தபோக்கிய வஸ்து இவ்வுலகில் என்ன இருக்கிறது? சிறந்த கீர்த்தியையடையாத ஜன்மாவால் யாது பிரயோஜனம்?

ஒருவனுக்கு வித்தையிருந்தால் அத்துடன் கவனம் செய்யக்கூடிய சக்தியும் ஐசுவரியமுமிருப்பின் அதற்கு உத்தமமான பாத்திரத்தில் ஈவதும், தர்மத்தில் பிரவிர்த்தியிருந்தால் கிருபையும், பூபதிக்குச் சாஸ்திரீயமான நீதிமார்க்கத்திற் செல்வதும், புத்திரர்களுக்கு மாதாபிதாமுதலியவர்களிடம் மரியாதையும், குலஸ்திரீகளுக்குத்தம் பதியிடம் தெய்வபக்தியும், இப்புவியில் மானிடராக வேற்பட்ட ஜன்மாவுக்கு விசேஷ கீர்த்தியுமிருந்தால், சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் புகழ்க்கூடிய விசேஷமான சிரேயஸ்ஸை யடைய லாமாகையால் அவ்விதமே இருக்கவேண்டுமென்று ஓர் மஹான் அறிவிக்கின்றார்.

ஸ்ரீ ஆர்ய தர்மம்
ருதிரோத்காரி௵ ஆவணி-மீ உஉவ

பசுவின் மஹிமை.

आदौ गवां सुमहिमा प्रतिपाद्यतेऽथ
तासां समस्तविबुधैरुषितं स्वरूपम् ।
पश्चाद्गवां च परिपालनमुच्यतेऽथ
गोभिः फलं किमिति चात्र विचार्यते हि ॥

ஆரம்பத்தில் பசுவினுடைய மகிமையைப்பற்றியும், பிறகு சமஸ்த தேவதைகளாலும் வசிக்கப்பட்ட அதன் ஸ்வரூபத்தைப்பற்றியும், அப்பால் அவைகளை இரக்ஷிக்க வேண்டிய முறையையும் அதன்பிறகு அவைகளால் நமக்கு சாஸ்திரத்திற் கூறியுள்ளபடிக்கும் அனுபவத்தாலும் ஏற்படும் பயன்யாதென்பதையும் முறையே நிரூபிக்கப் படுகின்றது.

ஆதியில் சிருஷ்டி ஆரம்பகாலத்தில் மாந்தர்களின் நன்மையைக்கருதிப்பரமனால் சிருட்டிக்கப்பட்டுள்ள பற்பல சாதனங்களுள் கோவென்பதும் ஒன்று. இதை மிருகவினங்களில் ஒன்ருக உலகிலுள்ளோர் வியவகரிப்பினும், அதன் பரிசுத்தமான சரீரத்தாலும் மிகச்சாந்தமான குணங்களாலும் பிறருக்கு அது செய்யுமுபகாரங்களாலும், மானிடப் பிறவியைக் காட்டிலும் அஃதைச் சிறந்ததென கொள்ளற்பாலதேயன்றி மற்றுமுள்ள சாமான்ய மிருகவினங்களுடன் சேர்த்துக்கூறுவது பொருந்தாதென்க. நம் சாஸ்திரங்களின் கண், கிறந்தமந்திரங்களை ஜபிக்கவேண்டி, அக்கினிஹோத்திரசாலே புண்ணியதீர்த்தக்கரை

திருமால் ஸந்நிதி, பரமேஸ்வர ஸந்நிதி முதலிய பாவனஸ்தல
ங்களை நிரூபிக்குமிடத்து பசுமடத்தையும் அவ்வித உத்தம
ஸ்தானங்களிலொன்றாக எடுத்துக் கூறப்பட்டிருப்பதைக்கா
ணலாம். பசு கட்டியிருந்தவிடத்தை அதாவது மாட்டுக்கொட்
டிலென்று நம்மால் சாதாரணமாக வழங்கப்படும் ஸ்தானத்
தை, முன்னோர்களான மகரிஷிகள் மோக்ஷம்வரையிலுள்ள
சகலவிதசித்திக்கும் சாதனங்களான மகாமந்திரங்களை ஜபிப்ப
தற்குற்ற புண்ணியப்பிரதேசமென ஸ்மிருதியின்கண் கூறி
நிற்குங்கால், அத்தகைய கோவின் அளவற்றமகிமை இவ்வித
மென நம்மால் எங்ஙனம் குறிப்பிடக்கூடும்? அன்றியும் மற்
றோர் விஷயமும் ஈண்டு அவசியம் கவனிக்கத்தக்கது. அஃது
பற்பல மன்னர்களும், அளவற்ற பிரபுக்களும் உலகில் பலவே
றிடங்களிலுமிருக்க, தருமத்தை நிலை நாட்டவேண்டி வை
குண்டத்திலிருந்து இங்கு அவதரித்த இலக்ஷ்மிநாதனான
அப்பரமன் அவ்விடங்களைவிட்டு நந்தகோகுலத்திலுதித்ததின்
காரணம் யாது என்பதேயாம். இதை யோசிக்குமளவில்
இக்கோசம்ரக்ஷணமெனும் புண்ணிய கர்மத்தையெப்பொழு
தும் செய்யவேண்டுமென்ற பேரவாகொண்ட அத்திருமால்,
மற்றையவிடங்களில் அவதரிப்பின் அங்கு உத்தமமான கோக்
கள் அதிகமிருக்கமாட்டாதென்ற காரணங்கொண்டும், அவ்வா
றிருப்பினும் அவற்றைத் தன்னால் எப்பொழுதும் நேரில் பரி
பாலிக்க வியலாதென்ற காரணம்பற்றியும், அவ்விடங்களை நீக்கி
நந்தகோகுலத்தின்கண் அவதரித்தாரென நன்கு விளங்கவில்
லையா? இவ்விதம் ஸ்ரீவைகுண்டவாஸியான நாராயணனே கோக்க
ளைசம்ரக்ஷிப்பதே மிகப்புண்ணிய கருமமெனக்கருதி கோ
பாலனென்னும் தம் திருநாமத்திற்கிணங்க பசுக்களுக்குத்தொ
ண்டு புரிந்தாரென்றால் இனி அதற்கு மகிமையுண்டாமென
ஐயுறவும், அதற்கு விளக்கவுரையும் வேண்டுமோ! இத்தகைய
மகிமைபொருந்திய புண்ணியமூர்த்திகளாய் விளங்குவதாற்
றான், ஆகிதாக்கினி துறவி, மஹோததி (महोदधि) முதலியவற்றை
நம் பாவம் அற வேறுதாகவேண்டி யாமாகச்சென்று தரிசிக்கவேண்

டுமென நிரூபிக்குமிடத்து; (धेनुश्चकपिला)என்ற வசனங்களாலும் கபில வர்ணமுள்ள பசுவையும் தேடிச்சென்று தரிசிக்க வேண்டுமெனச் சான்றோர் சாற்றியுள்ளார்.

பத்திராதிபர் குறிப்பு:— மகா-௱-௱-ஸ்ரீ திருவாதி டிஸ்டிரிக்ட் முனிசிப் M. சுப்பிரமணிய அய்யரவர்களால் ஸாமோபாகர்ம நிர்ணயமென்றவோர் துண்டு பத்திரிகை ஆரியதர்மத்தில் பிரசுரிக்க வேண்டுமென்று அனுப்பப்பட்டது. அதில் அய்யரவர்களது முதலாவது பத்திரிகைக்குச் சமாதானமாக பிரம்மஸ்ரீ மன்னார்குடி சுப்பிரமணியசாஸ்திரியவர்களால் எழுதப்பட்டு ஆரியதர்மம் 8-வது புத்தகம் 31-வது சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட ஸித்தாந்தத்தை விட இதில் அதிக விஷயமில்லாதபடியாலும், அதனாலேயே எல்லோருக்கும் ஸாமோபாகர்ம நிர்ணயமேற்பட்டு விடுமாகையாலும், இரண்டாவது முறையனுப்பிய துண்டுப் பத்திரிகை பிரசுரிக்கப் படவில்லை.

மறுபிறப்பின் முகவுரை.

ஆரியர்களே! இப்பூவுலகில் ஜனனம் கொண்டமனிதர்கள் யாவரும் ஏதாவதொரு மதத்தை அனுஸரித்துத்தான் வாழ்நாளைக்கழிப்பர் என்பது யாவரும் ஏற்கத்தக்கதே. ஆனால் அவ்விதம் இருக்கவேண்டுவது அவசியமா இல்லையா வென்பதைப் பற்றி இங்கிப்போது விசாரிக்கத்தக்கதல்லவாதல்பற்றியாவரும் மதப்பற்றுள்ளவர்களாய்த்தா னிருப்பார்களென்று வைத்துக் கொள்வோம். ஆனால் பூமியில் வடபாகத்திலோ வடமேற்கு பாகத்திலோ ஒருஜாதி மனிதர்களிருக்கிறார்களென்றும் அவர்களிடமுள்ள ஸமுத்திரம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்குமென்றும், அவர்கள் அவ்விடத்தில் பனிக்கட்டிகளையே பாறை பாறையாய்ப் பெயர்த்து ஒன்றன்மேலொன்றாய் வைத்து மே

லேயும் அப்படியேவைத்து அதற்குள் வஸிக்கிறார்களென்றும், சமுத்திரத்தின் மேலுறைந்திருக்கும் பனிக்கட்டியால் எங்கேயாவது வளையிருக்கக்கண்டு, அதன் பக்கத்தில் ஈட்டியும் கையுமாய்க் காத்திருந்தால் கொஞ்சநேரத்திற்கெல்லாம் சுவாஸம் விடுவதற்காக வெளியில் தலையை நீட்டும், ஸீல் என்னும் ஜலஜந்துவை ஈட்டியாற்குத்திக் கொண்டுவந்து பக்குவம் செய்யாமல் அப்படியே தின்பார்களென்றும் அதன் கொழுப்பை வைத்து விளக்கேற்றுவார்களென்றும், இப்படி அவர்கள் காலம் கழிக்கிறார்களென்றும் ஆங்கில சரிதத்திலிருக்கிறது. அவர்களுக்குஒருமதமும் கிடையாததுபற்றி அவர்களை மனிதர்போன்ற ஜந்துவென்று கூறவேண்டும். ஆகவே மனிதர்யாவரும் மதப்பற்றுள்ளவர்களென்பது திண்ணம். ஆனால் முற்காலத்திலும் இக்காலத்தைப் போற் பலவேறுமதப்பற்றுள்ளவர்கள் இவ்விந்தியாவில் வஸித்திருந்தனர். அம்மதங்கள் பலவிருப்பினும் பொதுவாய் இருபிரிவென்றேற்றுக் கொள்வோம். அவை நாஸ்திகமதமென்றும் ஆஸ்திகமதமென்றும் இருவகை. பரலோகம் இல்லையென்று ஏற்றுக்கொண்டவர் நாஸ்திகர். பரலோகம் உண்டு,நாம் அங்கு போகலாம், அங்குள்ளவர் இங்குவரலாம், இருவருக்கும் ஸம்பந்தமுண்டு, இவ்வித செய்கையால் இருலோகத்தவர்கட்கும் சேர்க்கையும் நேசமும் விரோதமும் ஏற்படும்; இவைகளால் நமக்கேற்படும் நன்மை தீமை இவை என்று தெரிந்துகொண்டு அதன்படி கர்மாவைச்செய்துகொண்டிருப்பவர் ஆஸ்திகரெனப்படுவார். இவ்விரண்டிலும் ஒவ்வொன்றிலும் ஆறுபிரிவுகள் உள. நாஸ்திகர்கள் சார்வாக மாத்யமிக யோகாசார ஸௌத்ராந்திக வைபாஷிக ஆர்கதரென்றறுவர். ஆஸ்திகர்கள் நியாய வைசேஷிக ஸாங்கிய யோக மீமாம்ஸக வேதாந்திகளென அறுவகையுள்ளார். இம்மதமொவ்வொன்றின் ஸொரூபத்தையும் வேறுஸமயத்தில் விசாரிப்பாம். இவ்விதம் நாஸ்திகர்கள் யாவரும் பரலோகத்தைத் தெளிவாய் ஏற்றுக்கொள்ளாததால் இப்போது நாம் தலையங்கத்தில் கொடுத்திருக்கும் பெயரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆஸ்திகர்கள்

தான் இம்மறுபிறப்பை ஏற்றுக் கொண்டனர். ஆனல் இப்போது நாம் இங்கு விசாரிக்கப் புகுந்தது என்னவெனில் நாம் ஒத்துக்கொள்ளும் மறுபிறப்பென்பது ஏற்கத் தக்கதுதானு? இதை ஏற்பதின் பயன் யாது ? ஏற்றுக்கொள்ளாத நாஸ்திகர்கட்கு நேர்ந்த குறையென்ன? என்று இவைகளை விசாரிக்கத்தானிங்கிறங்கினேம். இதை ஏற்றுக் கொண்டதால் தான் நம்மதம் அனுதிகாலம் தொட்டு இவ்விந்தியாவில் நிலைபெற்றிருக்கிறது. இதை ஏற்காத மதங்கள் ஒவ்வொரு சமயம் மின்னற்கொடிபோற் பிரகாசித்து மறைந்தன. இஃதொன்றுதான் நம் மதத்தின் ஜீவரத்தினம். இதனல் தான் நம் மதம் தைவமதமெனப்படும். அதனல் தான் கீதையில் பகவான்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

சாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும், துஷ்டர்களை யொழிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டும் ஒவ்வொரு யுகத்திலுமவதரிப்போமென்று நமது மதத்தின் ரக்ஷணையைத் தாமே ஏற்றுக் கொண்டார். இதொன்றை ஒப்புக் கொள்ளாவிடில் மதத்தினற்கு உயிரே கிடையாதென்பார்கள். இத்தகைய மிகச்சிறப்பும் பெற்றேங்கிய மறுபிறப் பென்னும் திவ்யரத்தினத்தின் விலையை யறியச் சக்தியுள்ள பெரியோர் நமது பரமாசாரியரொருவர் தான். அதைப் பற்றி நாம் இவ்விதமென்று எடுத்துரைக்கவே அனர்கராயினும் நமது முதறிஞரும் பரமாசார்யரும் இவ்விதம் கூறுகின்றனரென்று நமக்குக் கண்ணீற்பட மகிமையை கூறினும் அது ஆஸ்திக வம்சத்திலுதித்த சிறுவர்கட்குப் பயன் பெறுமென்று கொண்டு மட்டிலும் இதிலிறங்கினேனே தவிர மற்று இதனை முழுமையும் விஸ்தாரமாய்க் கூறிவிடலாமென்ற தைரியத்தினுலில்லை யென்று தெரிவித்துக் கொண்டு இனி விஷயத்திலிறங்குவாம்.

நம ஆஸ்திக ஷட்தர்சனங்களிலும் மறுபிறப்புண்டென்ற விஷயமதான் அஸ்திவாரக்கல்லாக ஏற்பட்டிருக்கிறது. ஆனல்

பிறக்கிறதுமில்லை சாகிறதுமில்லைஎப்போதும்அஜன். நிர்விகாரன் நிர்விகற்பன் சங்கற்பமற்றவன் ஆகாயம்போலெங்கும் பாவியவன் நித்தியன். அவனையுண்டுபண்ணினவனே கிடையாது. அவனுக்குக்கமனாகமனம் கிடையாது. இங்கேயே பிர்ம்மனாய் விடுகிறான். என்றெல்லாம் உபநிடதங்கள் கதறுகின்றனவே. அதை அவலம்பித்த வேதாந்த சாஸ்திரமும் வேதத்திற்குப் புறம்பான மதம்போல் மறுபிறப்பை ஏற்றுக்கொள்ளவில்லையே. அப்படியிருக்க வைதிகமதம் ஆறும் ஏற்றுக்கொண்டனவென்று மொழிவதெப்படி என்றால் நமது வேதாந்தசாஸ்திரம் தான் மறுப்பிறப்பென்பதை நன்கு விளக்குகின்றது. அதெவ்விதமெனிற் கூறுவாம். ஸூத்திரகாரர் வ்யாஸாசாரியார் இதற்காகவென்றே

तदन्तरप्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः प्रश्ननिरूपणाभ्यां ।

என்று 3வது அத்தியாயத்தை ஆரம்பித்தார். இங்குப் பரமாசார்யன் தெளிவாய் ஜீவனது போக்குவரவைப் பற்றி விஸ்தாரமாய் வெளி யிட்டிருக்கின்றனர். ஆனால் முற்கூறிய உபநிஷத் வாக்கியங்களுக்குக் கதி யென்னவென்றால் அடிக்கடி போவதும் வருவதும் ஸம்ஸாரக் கடலில் ஆழ்வதுமாய்த் தத்தளித்துக் கொண்டு ஐயோ கரைதெரியவில்லையே. ஸதகுருவென்ற ஓடம் ஆங்காங்கு இக்கடலில் மிதந்து கொண்டிருந்தாலும் தான் அதில் சம்பந்தப் படாமல் அவ்வலைகள் வந்து மோதியபோதிலும் அவைகளை லக்ஷ்யம் செய்யாது அதன் மேல் தத்திக் குதித்துக் கொண்டு தன்னை அண்டிவரும் பிராணிகளை ஏற்றிக் கொண்டு கரையிற் சேர்க்குமென்று கேட்டிருக்கிறோமே. அத்தகைய ஓடமெங்கே என்று கதறித் தவிக்கும் முமுக்ஷுக்களைப் பார்த்து ஓடமோட்டும் கப்பற்காரன் போல் இவர்களை அழைத்து அப்பா, பயப்படாதே உன்னைக் கரைகொண்டு சேர்க்கிறேன். உனக்கு இனிக் கவலை வேண்டாம். இந்த ஸம்ஸாரக் கடலே பொய். நீதான் அவன் அவனே நீ. உனக்குப் பிறப்புமில்லை. ஸ்வப்பனத்திற் புலியைக்

கண்டவன் உளறி அடித்துக் கொண்டு கதறி ஓடுவதுபோல் ஓடுகிருயே. இது பொய். நன்கு கண்ணைத்துடைத்துக்கொண்டுபார் என்றெல்லாம் அத்தகைய முமுக்ஷுவைக் குறித்து முன்வாக்யங்கள் உபநிடதங்களிற் கூறப்பட்டிருக்கின்றன.

प्राक् तथाभूतात्मविज्ञानात् सर्वव्यवहारोपपत्तेः ।

அப்படிப்பட்ட ஆன்மஞானம் நிலை பெறுமட்டும் எல்லா விஷயவிவகாரமும் உண்டென்று அடிக்கடி ஜாக்கிரதைப் படுத்துகிற நம் பரமாசார்யாள் மறுபிறப் பென்ற பெரும் பிணியால் வருந்தி அலரும் ஸம்ஸாரிகளைக் காப்பாற்றவே அவதரித்தபடியால் வேதாந்த சாஸ்திரம் மறுப்பிறப்பை ஏற்றுக் கொள்வில்லை யென்று சொல்லவே முடியாது. இதை இவ்வுதாரணத்தால் இன்னும் தெளிவாய்ப் பார்க்கலாம். நமது வீட்டுக் குழந்தை சாதாரணமாய் வாயிலில் வரும் கோரவேஷமுள்ள பிச்சைக்காரனைக் கண்டு பயந்தோடி வந்தால் அப்போது தகப்பன் அக்குழவியைக் கண்டு உள்ளே ஓடிப் போ பூச்சாண்டி பிடித்துக் கொள்வான் என்று தானும் பயந்தவன் போற் கூறுவான். பிறகு மற்ருெரு பையன் பிச்சைக் காரனைக் கண்டதும் உண்மையாய் ஆவென்றலறித் தட்டுக் கெட்டுத் தடுமாறி விழுந்தவுடன் அந்தப் பிச்சைக்காரனும் இக் குழந்தையைப் பார்த்ததும் ஆகா இவன் மிகப்பயமடைந்து விட்டான். இனி நாம் இங்கிருந்தால் இவனது பெற்ருேர் வந்தால் நம்மைத்தீர்த்து விடுவாரென்று சீக்கிரமாக ஓடிவிடுவான். இக்கூறலைக் கேட்டதும் பிதா என்ன கார்யமிருந்தாலும் எறிந்து விட்டு ஓடிவந்து குழந்தையை வாரி எடுத்து அப்பா ஏன் உனக்கு இவ்வளவு பயம், நடுக்கம் எதற்கு; பயப்படாதே சொல் என்று சமாதானமாய்க் கேட்டால் குழந்தை அப்பா யாரோ ஒரு பயங்கரனுன பிச்சைக் காரன் என்னைப் பையில் போட்டுக் கட்டிவிடுவேனென வந்தான். அதனுல் என் கையிலிருந்த பொம்மைகளை யெல்லாம் எறிந்துவிட்டேன். மற்ற சாமான்களை எங்கே போட்டேனே தெரியாது. எனக்கு இங்கிருந்தால் நடுங்குகிறது. இன்னும் பூச்சாண்டி வருகிருன்

போல் இருக்கிறது என்று பதறும் பையனுக்குத் தகப்பன் இவ்வாறு சமாதனாம் கூறுவான். குழந்தாய் பயப்படாதே பூச்சாண்டியாவது ஒன்றாவது அவன் இங்கு வருவானோ. அவன் இங்கு வந்தால் நான் அவனைக் கொன்றுவிடுவேன். இந்தத் தெருவில் பார். மற்றதெருவிலும் பார். ஒரிடத்திலும் இல்லை. ஆனால் நீ இனிமேல் என் பக்கத்திலேயே இரு. கண்டபடி எல்லாம் வெளியிற் போகக்கொண்டு தானே வருகிறானென்று ஸமாதானம் செய்து குழந்தையைச் சாந்தமாக்குவான். ஆனால் இங்கு முதலில் பூச்சாண்டி வந்தது உண்மை பயப்பட்டதும் உண்மை. இப்போது தகப்பன் தேறுதலை அடைந்தபிறகு தன் சினேகிதர்களிடம் என்ன சொல்கிறான். பூச்சாண்டியாவது ஒன்றாவது அவன் கிடக்கட்டும் எங்கே. இனிக்கண்ணிற் தென்படட்டும் பார்ப்போமென்பான். அப்பூச்சாண்டியும் பிறகு அவன் பக்கமே வரமாட்டான். அது போல்,

जन्मजरामरण प्रबन्धचक्रभ्रमणकृतयासदुःखोदकापार महोदधिप्लवभूतं गुरुमासाद्य तत्तीरमुद्दिधीर्षवः धर्माधर्मसाधन तत्फललक्षणात् साध्यसाधनरूपात् निर्विषणाः तद्विलक्षणनित्यनिरतिशयश्रेयःप्रतिपित्सवः ॥

பிறப்பு, கிழத்தனம், மரண மென்பவைகளின் கூட்டமாகிற சக்கரத்தின் சுழற்றத்தாலேற் பட்ட ஆயாஸம் துக்கமென்று ஜலம் நிறைந்த கரையில்லாத சமுத்திரத்தில் ஒடமாய் இருக்கும் குருவை யடைந்து அச்சமுத்திரத்தின் கரையேற விரும்பியவர்களாய் தர்மம் அதர்மம் என்ற சாதனமென்ன அதற்கேற்பட்ட பலனென்ன. இதனால் சாதித்துக் கொள்ளக் கொள்ளக் கூடியதென்ன. இவைகளின்றும் நொந்து விலகியவர்களாய் அதற்கு எதிரிடையான நித்தியமாயும் ஒப்பற்றதாயும் இருக்கிற சிரேயஸ்ஸை அடையவிரும்பியவர்கள் தான் முமுக்ஷுக்களென்று பகவத்பாதர் பிருகதாரண்யம் நான்காவது பிராமணம் எட்டாவது மந்திரத்திற் கூறிய லக்ஷணமுள்ள முமுக்ஷுக்கள் முதலில் தாங்கள் ஸம்ஸார மென்னும்

பூச்சாண்டியைக் கண்டு நடுக்க முற்றவர்களாய்த் தம் கையிற் கிட்டியிருந்த மண் பொன் பெண் என்றும் பொம்மைகளை எறிந்துவிட்டுப் பரம குருவென்னும் ஓடம் போன்ற தகப்பனை அடைந்து

स्वामिन् नमस्ते नतलोकबन्धो कारुण्यसिन्धो पतितं भमाब्धौ ।
मामुद्धरात्मीयकटाक्षदृष्ट्या ऋज्वातिकारुण्यसुधाभिवृष्ट्या ॥
दुर्वारसंसारदवाग्नितप्तं दोधूयमानं दुरदृष्टवातैः ।
भीतं प्रपन्नं परिपाहि मृत्योः शरण्यमन्यं यदहं न जाने ॥

ஸ்வாமி உமக்கு நமஸ்காரம். வணங்கும் ஜனங்களுக்குப் பந்துவே, கருணைக்கடலே, பவமென்றும் கடலில் விழுந்த என்னை அதிகக்கருணை யென்னும் அமிருதப் பெருக்கையுடைய தங்களுடைய திருஷ்டிபாலகரை யேற்றவேண்டும். தடுக்க முடியாத ஸம்ஸாரமென்னும் காட்டுத்தீயாற் கொளுத்தப்பெற்று துராதிருஷ்டமென்னும் காற்றால் உருட்டியடிக்கப்பட்டு யமனெனும் பூச்சாண்டியால் நடுநடுங்கித்தங்களைச் சரணமடைந்த என்னைக்காப்பாற்றும், என்னை ரக்ஷிப்பவன் வேறொருவனிருப்பதாய் யானறியேன் என்று அத்தகைய முமுக்ஷு கதறும்போது கருணைக்கடலான குருவென்னும் பிதா ஓடிவந்து அப்பா பயப்படாதே ஸம்ஸாரமாவது; ஒன்றுவது;யமன் எது?பழுதையைக்கண்டு பாம்பெனமிரண்டாய். திரும்பிப்பார் ஒன்று மில்லை. பிரபஞ்சமே பொய்என்பார். குருவின் வாக்கியத்தைக் கேட்டவுடன் சந்தோஷமாய்த் திரும்பிப்பார்ப்பான்' ஒன்றையும் காணமாட்டான் பயந்து விழுந்த பையனைக்கண்டு ஓடிவிட்ட பூச்சாண்டிபோல் தீவிரமுமுக்ஷுவுக்குப்பிரபஞ்சமென்பது ஸத்குருவை அடைவதற்கு முன்னாலேயே ஓடிப்போய்விடுமென்றாலும் பிறகு ஆசாரியனது ஸமாதானமான உபதேசவாக்கால் தான் நிச்சயமாய் இவனுக்கிருந்த பிரமமும் விலகும். இப்படி அரண்டு ஓடிவரும் முமுக்ஷுவைப்பார்த்தது தான்

सर्वदासमैकरसमद्वैतमविक्रियमजममर-
ममृतमभयमात्मयं त्वब्रह्मैवस्मः ।

என்று இரண்டாவதல்ல இதைத்தவிர மற்றதெல்லாம் பொய் என்றெல்லாம் தேறுதல் செய்வார். ஆகவே அத்கையபக்கு வசித்தனுக்கு குரு சொல்வதெல்லாம் உண்மைதான். அதே வாக்கியம் பக்குவமில்லாமல் வியவகார தசையிலிருப்பவனுக்கு பொய். இது எது போலென்றால் பூச்சாண்டியைக்கண்டு பயந்த குழந்தைக்குத் தகப்பன் தேறுதல் சொல்லும் போது பூச்சாண் டியாவது ஒன்றுவது அவன் இங்குவரவேமாட்டான். வந்தால் கொன்றுவிடுகிறேன். இனிமேல் நீ இந்தப்பையன் களோடுசே ராதே. கண்ட கண்ட விடமெல்லாமலையாதே என்றுசொன்ன படி அனுஷ்டிக்கிற பையனுக்கு மறுபடியும் பூச்சாண்டி தரிச கிடையாது. மற்ற பையன்கள் இந்த பிதாசொல்கிறவார்த்தை குழந்தைகள் ஸமாதானத்துக்காகத் தான் என்று கவனியாமற் போவார்கள். இவர்கள் மறுபடியும் அந்தப் பூச்சாண்டியைப் பார்ப்பார்கள், அவனோடு சல்லாபம் செய்வார்கள். அவனோடு கட்டிப்புரளலாம். அவனை நம்புவார்கள். மோசம் போவார்கள். இன்னும் அநேக சுகதுக்கங்களையுமடையலாம் இந்தப்பையனு க்கோ இதொன்றுமில்லை. இதுபோலவே ஸத்குரு சரணத்தை அடைந்தவன் ஒருநாளும் கெடமாட்டான் அவன் ஸர்வதாமுக் தன். மற்றவர்களுக்கு ஜனனமரணம் உண்டு. ஆகவே இத்த கையஇறப்பையும் மறு பிறப்பையும் முதற்படியாய் வைத்துக் கொண்டு தான் வேதாந்த சாஸ்திரமே பிரவர்த்தித்தது. இதில் லாவிடில்ஸம்ஸாரியாய்இருப்பவனுக்குப்பயமேஎங்கிருந்துவரும். ஆகையால் வேதாந்த சாஸ்திரத்திற்குத்தான் மறுபிறப்பு முதற் படி என்று கொள்ளவேண்டும். ஆகவே ஆஸ்திகஷட்தர்சனங் களுமே மறுபிறப்பை ஒப்புக்கொண்டதாதல் பற்றிஇனிஇதன் ஸ்வரூபத்தைப்பற்றி விசாரிப்பாம். சுபம்

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

இந்துதேச வைத்தியம்.

(௪௪ரு-வது பக்கத்தொடர்ச்சி.)

சாஸ்திரஞானமும் அநுபவஞானமும் சிறிதுமின்றி தாங்கள் வைத்தியர்களென்று பெயர்வைத்துக்கொண்டு திரியும் அறிவிலிகளாகிய இம்மாந்தர்களின் பரிதாபமான நிலைமையைப் பற்றி விரித்துக்கூறுவதில் பயன் யாது? நியாயமாகவும் தருமமாகவும் வெகுசாந்தமாயுமிருந்து வியாதியை வசப்படுத்தி உலகத்தினருக்குஉதவி செய்ய வேண்டிய தொழில் பூண்ட இவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர வாஞ்சையற்று, ஜன்ம சத்துருக்களைப் போல் பாவிப்பதற்குக் காரணமென்ன? சற்று உற்று நோக்கின் உண்மைவெளியாகும். இருவருக்கும் ஏதாவது சாஸ்திர ரீதியாகத் தெரிந்தாலன்றோ அதன் வழியே நின்று ஏதாகிலும் யோசனை செய்யப் போகின்றார்கள்? ஒவ்வொருவரும் தங்களுக்குத்தானே ஆசிரியர் ஒவ்வொருவருடைய மனப்போக்கிற்கும் அவர்களுடைய எண்ணமும் அபிப்பிராயமுந்தான் காரணமாகும். அன்றியும் தமக்கு வியாதியின் நிலை (Nature of the disease) தெரியாதென்பதைப் பிறர் அறிந்து கொள்வார்களே யென்ற அச்சம் ஒருபக்கமும் அதனால் தன் பெயருக்கும் பிழைப்பிற்கும் எங்கு கெடுதிநேரிடுமோ வென்ற தப்பெண்ணம் ஒருபக்கமும் அவர்கட்கு ஏற்பட்டு விடுகின்றது.

இத்தகைய வைத்தியர்களால் கஷ்டப்படும் நோயாளிகளை கணக்கிட்டுச் சொல்ல யாரால் முடியும்? சந்தையில் அடித்தவனுக்குச் சாக்ஷியேது? மருந்து உபாதியென்றும் வியாதி உபாதியென்றுங் கண்டுபிடிப்பது எங்ஙனம்? மலபந்தத்திற்காக இவர்களிடம் பேதிக்குவாங்கிக் கொண்டு இறந்தவர்களுமுண்டு.

இன்னுமொரு உதாரணம் காட்டி இதை நிறுத்துகின்றோம். சென்னை லிங்கச்செட்டித் தெருவில் ஒருவருக்கு குடல் சரிந்துபீஜப்பையில் விழுந்தது அதற்கு சென்னையில்

சுதேசவைத்தியர்களுக்குள் மிகவும் பெயர் பெற்ற ஒருவர் வைத்தியஞ் செய்யவந்தனர்.வந்தவுடன் அதுவாயுவென்றும் அதற்கு பேதிக்குக் கொடுக்கவேண்டுமென்றுஞ் சொல்லிப் பேதிக்குக்கொடுக்க ஆரம்பித்தார். தெய்வஸங்கற்பமாய் ஆங்கில வைத்திய முறையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் அங்கிருக்க நேர்ந்தது "மலப்பையான து சரிந்து பீஜப்பையில் அவகேடாய்க் கிடக்கின்றது. இப்பொழுது பேதிக்குக் கொடுத்தால் வியாதிஸ்தரின் உயிருக்குக் கெடுதிவருமென்று ஷை இங்கிலீஷ் வைத்தியர் சொல்லியும் சுதேசவைத்தியர்கேளாது தாம் சொல்வது சுதேசமுறையென்றும் மற்றவர் கூறுயது இங்கிலீஷ்முறையென்றும் தடுத்துப்பேசி ஏசவாரம்பித்தார். கடைசியாக இங்கிலீஷ் வைத்தியர் சொன்னபடியே நடந்து கொண்டமையால் சரிந்தகுடலை அந்தஸ்தானத்திற்கு தள்ளிவிடப்பட்டது. அச்சமயம் அப்படிச்செய்யாது பேதிக்குமாத்திரங் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் மிக்கக்கெடுதியுண்டாயிருக்குமென்பதற்குத் தடையில்லை. இங்கு நாம் யோஜிக்கவேண்டியவை சில உண்டு. குடல்வாதம்இன்னதென்றும், அதற்குச் செய்ய வேண்டியது இன்னதென்றும் தெரியாதிருந்தும்அதற்கு சுதேசவைத்தியஞ்செய்ய புறப்பட்டதொன்று, புறப்பட்டதோடு நோயாளியின் தேகத்திற்கே கெடுதலான வழி தேடியது ஒன்று, அவ்வியாதியின் உண்மையினை யறிந்தவர் பேதி கெடுதி செய்யுமென்று சொல்லியும் தன்வார்த்தையை வியாதிஸ்தரின் உயிருக்கு மேலாகக் கருதி அவ்வார்த்தைக்கு இளப்பம் வராவண்ணம் பேதிக்கே கொடுக்க வேண்டுமென்று பிடிவாதஞ் செய்தது மற்றொன்றும். இவர் சொல்வது சுதேசமுறையென்றும் மற்றவர் கூறியது ஆங்கில முறையென்றும் வெகுநியாயம்போல் கூறியுள்ளாரோ? மருந்தில்இரண்டுமுறைகளும் வித்தியாசப்பட்டாலும், வியாதியின் கூறும் வித்யாஸப் படுமோ? இதென்ன விந்தை! சுதேச வைத்தியர்களுள் சிறந்தவரின் நடத்தையே யிப்படியாயின் மற்றவர்களைப்பற்றிப் பேசவேண்டுவதில்லை.

நம்தேசஜனங்களுக்கு அத்தியாவசியமான மருத்துவசாஸ்திரமே, இப்பொழுது நம்தேசத்தில் அனேகமாய் அனுஷ்டானத்திலில்லையென்னலாம். இப்பொழுது அது கேவலம் யுக்தி புத்தியில் குறைந்த படிப்பற்ற நாவிதஸ்திரீகள் வசமாய் ஆய் விட்டது. புருஷர்களுக்கெல்லாம் அவ்விஷயத்தில் ஒன்றும் தெரியாது. பிரசவத்தையொட்டிய யாவும் பெண்பிள்ளைகள் விஷயமெனச்சொல்லி, அவர்கள் பக்கம் விட்டு விட்டமையால் நமக்கு அநேக இடையூறுகளுண்டாயிருக்கின்றன. பலபிள்ளைகளைப் பெற்றவளும் நாவிதஸ்திரீகளுமே மருத்துவம் பார்ப்பதற்குத் தகுதியுள்ளவர்களென்று மதிக்கப் படுகின்றார்கள். சிறிதும் மருத்துவஞானம் இவர்களுக்கில்லாத தன்மையினால் பிரசவகாலத்தில் சாதாரணமாய் நடக்கும் அற்பவிஷயங்களையெல்லாம் கண்டு அஞ்சுகின்றார்கள். அஞ்சிச்செய்ய அநாவசியமாயினவும், செய்யக்கூடாதவையுமான பற்பலகருமங்களைச் செய்து பிரசவஸ்திரீக்குக் கெடுதியே தேடுகின்றனர். அஞ்சிப் பரிகாரம் தேடவேண்டிய சமயங்களில் பரிகாரங்கள் தேடாமலும், சிற்சில சமயங்களில் முரட்டுத்தனமான காரியங்கள் செய்தும் பிரமாதமாக்கி விடுகின்றார்கள். உலகத்தில் அனேகமாய் சுகப்பிரசவங்களாகவேயிருக்கின்றன. இதில் அநேகமாய் எவர்களது ஒத்தாசையுமில்லாது பிரசவமாகிவிடுகின்றமை பற்றி, இவர்களது அறியாமையால் பெரும்பாலும் தாய்க்கும் குழந்தைக்கும் கெடுதியில்லாமற் போகின்றது. உண்மையில் சுகப்பிரசவங்களில் ஒருவர் எவ்வளவு பிரவேசிக்காமலிருக்கிறார்களோ, அவ்வளவுக்கும் அது நன்மையே. மருத்துவம் தெரியாத மருத்துவஸ்திரீகளை இவ்வித சந்தர்ப்பங்களில் வைத்துக் கொள்வதைவிடப் பிரசவித்தவுடன் செய்யவேண்டிய இரண்டொருவிஷயங்களை நன்கறிந்த நம் வீட்டுப் பெண்பிள்ளைகளிருந்து செய்தால் போதுமானது. விஷயமறியாத மருத்துவச்சிகளின் செய்கையால் சிலசமயங்களில் சுகப்பிரசவங்களும் கஷ்டப்பிரசவங்களாகி விடுகின்றன.

இஃதன்றிக்கஷ்டப் பிரசவங்களில் கிரமமாகச் செய்ய வேண்டியவற்றைச் செய்து சுகமாய்த் தாய்வேறு குழந்தைவே ருய்ப் பண்ணவகையறியாது புரியும் அநீதங்களுக்குக் கணக்கில்லை. பிரசவவேதனை யெடுத்திருக்கும் ஸ்திரீயின் அடிவயிற்றில் உலக்கை-யைவைத்து அமிழ்த்துவதும், உரலில் உட்காரச்செய்வதும், அடிவயிற்றில் கையைப்போட்டு தாறுமாருய் வழிப்பதும். சிரோதயமின்றிகைகால் உதயமாகும் குழந்தைகளின் கைகால்களைக் கண்டபடியிழுப்பதுமான காரியங்கள் மிகவும் குரூரமானவைகளாம்- இவ்வாறு நம்வைத்தியம் அனேக அபாத்திரர் கையில் சிக்குண்டு ஜனங்களுக்கு நன்மை பயக்குவதற்குப் பதிலாகத்தீமையையே விளைவிக்க ஆரம்பித்துவிட்டது. தக்கபடி வைத்தியஞானமில்லாதவர்கள் வைத்தியஞ் செய்யக்கூடாதென்று சட்டஞ்செய்ய முன்ஒரு சமயம் அதிகாரிகள் யோஜனை செய்ததுமுண்டு. ஆனால் அக்காலத்தில் தக்கபடி ஆங்கில வைத்தியங் கற்றுத்தேர்ந்தவர்கள் ஜனங்களுக்கு வைத்தியஞ்செய்யப்போதுமான அளவு இல்லையென்றும், அதனல் ஜனங்கள்மிகவும்கஷ்டப்படுவார்களென்றும் அஞ்சி அவ்வாலோசனையை நிறுத்திவிட்டனர். மேற்சொன்ன சில போலிச்சுதேச வைத்தியர்களுடைய நடத்தையைப்பார்க்குமிடத்து, அவ்விதச்சட்டமொன்று இருப்பினும் குற்றமில்லை யெனத்தோற்றுகின்றது.

ஐரோப்பாவிலும் நம்தேசவைத்தியம் நன்கு மதிக்கப்படுகின்றது. சுதேசவைத்தியம் தலையெடுக்காது நசித்துப்போனதுஒவ்வொருவருக்கும்எவ்வளவு விசனகாமாயிருக்கின்றதோ அவ்வாறே மேனாட்டார் தற்காலம் அடைந்திருக்கும் வைத்தியாபி விருத்தியைப்பற்றி ஒவ்வொருவரும் சந்தோஷப்படக்கூடியதாகவிருக்கின்றது.— தற்காலம் அதிப்பிரபலமாயிருக்கும் ஐரோப்பிய வைத்தியங்களிற் கூறியுள்ள மருந்துகளுக்குச் சமானமான ஔஷதங்கள் நம் தேசத்திலில்லாமல் போக வில்லை. ஐரோப்பியர் இன்னும் கண்டுகொள்ளாத அநேகமருந்துகளும் நம் தேசத்திலிருக்கின்றன. சமீபகாலத்தில் தான் அவர்கள்

நம்மிடமிருந்து எட்டிக்கொட்டையை (Dyspecies), மந்தாக்னி ரோகத்திற்கும் பாரிசவாயுவிற்கும் கொடுக்கக்கற்றுகொண்டார்கள். சுவாசகாசத்திற்கு, ஊமத்தையிலையைக் கொடுக்கும் வழக்கமும் சமீபகாலத்தில் தான் நம்மிடமிருந்துஅவர்கள் கற்றுக்கொண்டதாயறிகின்றோம். ஐரோப்பிய மருந்துகளுக்குப் பதிலாக நம் தேசத்துச்சரக்குகளையே அனேகமாயுபயோகப்படுத்தலாம் தக்க ஆயுதங்கள் நம் தேசத்திலிருந்தும் அதையெடுத்துத் தக்கபடி அறிந்து உபயோகிக்கும் புருஷர் கிடையாது. ஐரோப்பிய மருந்துகளுக்குச் சமானமான சரக்குகள் நம் நாட்டு தரிசு நிலங்களினின்று கிரயமில்லாமல் எடுத்துக் கொள்ளலாம். அவற்றின் பெயர்களை எழுதிக் கொண்டு போனால் அநாவசியமாய் விரியுமென்று நிறுத்துகின்றோம். தற்காலம் வைத்திய கலாசாலைகளில் படித்தவர்களில் பெரும்பான்மையோர் ஆங்கில வைத்திய ஷாப்புகளில்லாத விடத்தில் வைத்தியஞ் செய்யக் கூடாதவர்களாக விருக்கின்றனர். இஃதென்ன பரிதாபமானகாரியம்! இது வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு வருத்தப் படுவது போலிருக்கின்றது. வியாதியின் தன்மையை யறியவும், வியாதியை வசப்படுத்தும் மார்க்கத்தை யறியவும் எந்த சாஸ்திரப்படி கற்றால் தான் என்ன? நம் தேச பதார்த்தகுண ஆராய்ச்சியில்லாத குறைவினால், இவர்கள் இவ்வித இடுக்கண்களுக்குள்ளாகின்றனர். அனேக சுதேச வைத்தியர்களோ சிற்சில முறைகளையும் ஒஷதிகளையும் தெரிந்தவர்களாயிருந்தும், பிரயோகிக்குஞ் சமயமறியாது மயங்குகின்றனர். ஆகவே அவர்கள் நல்லமருந்துகளை வைத்துக் கொண்டிருப்பினும் பிரயோஜனமில்லை. ஆங்கில வைத்தியங்கற்ற அனேக சுதேசிகள் ஐரோப்பிய மருந்தில்லாத காலத்தில் தங்கள் சக்தியைக் காட்ட அசக்தர்களா யிருக்கின்றனர்.

(தொடரும்)

இந்து வைத்தியாபிமானி.